## அரும்பாக்கம், நேரு பூங்கா

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, டாக்சி சேவை தொடக்கம்

சென்னை, செப்.29–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில் பயணிகளுக்கான பல்வேறு வசதிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் குறிப்பிட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, டாக்சி சேவையை, தனியார் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

இதில் நந்தனம், ஆயிரம்விளக்கு, சென்னை சென்டிரல் உள்பட 10 மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, டாக்சி சேவையை அறிமுகப்படுத்தி உள்ளது. தற்போது கூடுதலாக அரும்பாக்கம், நேரு பூங்கா மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, டாக்சி சேவையை மெட்ரோ ரெயில் நிறுவனம் தொடங்கியது.

இதற்கு சேவை கட்டணமாக ரூ.10 வசூலிக்கப்படுகிறது. இந்த கட்டணத்தை மெட்ரோ பயண அட்டை மற்றும் செல்போன் செயலி மூலமாக செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சேவை விரைவில் சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், அண்ணா நகர் டவர் மெட்ரோ ரெயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்படும் என மெட்ரோ ரெயில் நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.